
ॐ

**Balu Saravana Sarma**
*Prohithar – Astrologer*
**No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677**
Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

# பொங்கல் வழிபாடு - நல்ல நேரம் 15.1.2011 சனிக்கிழமை
## Auspicious Time for Pongal Prayer




## ■ தை மாத பிறப்பு: 15.1.2011 சனிக்கிழமை

சூரியன் நிராயன(Sidereal) முறையில் தனுர் இராசியில் (270°) பிரவேசிக்கும் காலம். தை மாத பிறப்பாகும். 14.1.2011 அன்று சூரிய அஸ்மனத்திற்கு பிறகு தை மாதம் பிறப்பதால் மறுநாள் 15.1.2011 சனிக்கிழமை தை மாத முதல் நாளாகும். இது பொங்கல் திருநாள் என்றும் சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகிறது.

சூரியன் நிராயண முறையில் மகர ராசியில் பிரவேசிக்கும் காலம் மகரசங்கராந்தி என்றும் நிராயன முறையில் சூரியன் வடக்கு நோக்கி பயணத்தை துவக்கும் இந்த காலம் உத்திராயனம் என்றும் அழைக்கப்டுகிறது.

புவிமையக்கோட்பாடு சாயன (Geocentric longitude) முறையில் சூரியன் 22.12.2010 அன்று காலை 04:55:17மணி அளவில் உத்திராயனம் (winter solstice )துவங்கியது.

| *சித்தாந்தம்* | *தேதி* | *நேரம்* | *15.1.2011 அன்று சென்னை* | |
|---|---|---|---|---|
| திருக்கணிதம் | 14.1.2011 வெள்ளி | மாலை 6:42 | சூரிய உதயம்: 6:35 | சூரிய அஸ்தமனம்: 6:01 |
| வாக்கிய கரணம் | 14.1.2011 வெள்ளி | இரவு 9:39 | இராகு காலம்: 9:26-10:52 | எமகண்டம்:1:43 - 3:09 |
| சூரிய சித்தாந்தம் | 14.1.2011 வெள்ளி | இரவு 1139 | | |

இந்த ஆண்டு தை மாதத்தின் முதல் நாள் அதிகாலை முன்னரே சூரியன் மகர ராசியில் பிரவேசித்து விடுகிறார். எனவே தை முதல் நாள் அன்று காலை சூரிய உதயம் முதல் நன் பகல் வரை பொங்கல் வைத்து வழிபடலாம்.

## பொங்கல் வழிபாடு - நல்ல நேரம்: 15.1.2011 சனிக்கிழமை


சூரியன் நிலைக்கொண்டுள்ள மகர லக்னம் மற்றும் மீன லக்னம் ஆகிய இரண்டு லக்னங்களும் அஷ்டம (8ஆம் இடம்) சுத்தியுடன் உள்ளது. அந்த நேரத்தில் பொங்கல் இட்டு சூரிய வழிபாடு செய்வது நன்று

- ★ மகர லக்னம்: காலை 6:45 முதல் 8:30 வரை
- ★ மீன லக்னம்: பகல் 10:52 முதல் 11:50 வரை
- ★ ராகு காலம்: 9:26 - 10:52
- ★ எமகண்டம்: 1:43 - 3:09
- ★ சூரிய உதயம்: 6:35
- ★ சூரியன் உச்சி: 12:17
- ★ சூரிய அஸ்தமனம்: 18:01

குறிப்பு: இங்கு சென்னை நேரம் தரப்பட்டுள்ளது ஆயினும் இதை தமிழகம் முழுவதும் பயன் படுத்தலாம்.

## கிருத்திகை விரதம் என்று வழிபடுவது?

சந்திரன் கார்திகை நட்சத்திரத்தில் இருப்பதால் அன்று கிருத்திகை விரத நாளாகும். ஆயினும் அதே மாதத்தில் கடைசியில் மீண்டும் கார்திகை வருவதால் விரத நிர்னய விதிப்படி இரண்டாவது கார்த்திகையே வழிபாட்டுக்கு உகந்தது. எனவே பொங்கல் அன்று கிருத்திகை விரத வழிபாடு தேவையில்லை.




## சந்திரன் நிலை:

பொங்கல் அன்று திருக்கணித முறைப்படி காலை 7:41 மணி வரை மேஷத்திலும் பின்னர் ரிஷபத்தில் சந்திரன் இருப்பார். எனவேதான் இராசி கட்டம் படத்தில் மேஷத்திலும், ரிஷபத்திலும் சந்திரன் இடம் பெற்றுள்ளது.

ஏழை விவசாய கூலித்தொழிலாளர்களுக்கு புதிய ஆடை வாங்கத்தருவதுதான் உண்மையான தர்மமாகும்

### சிங்கப்பூர் & மலேசியா தைப்பொங்கல் வழிபாடு நேரம்

14.1.2011 வெள்ளி அன்று சிங்கை நேரப்படி இரவு 9:02 மணி அளவில் திருக்கணிதப்படி சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கிறார். சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு மகர ராசியில் பிரவேசிப்பதால் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில், **15.1.2011 சனிக்கிழமை** அன்றுதான் மகரசங்கராந்தி - பொங்கல் திருநாளாகும்.

சூரியன் நிலைக்கொண்டுள்ள மகர லக்னம் மற்றும் மீன லக்னங்கள் அஷ்டம (8ஆம் இடம்) சுத்தியுடன் உள்ளது. அந்த நேரத்தில் பொங்கல் இட்டு சூரிய வழிபாடு செய்வது நன்று

✱ மகர லக்னம்: காலை 7:13 முதல் 9:13 வரை ✱ மீன லக்னம்: பகல் 11:05 முதல் 12:54 வரை
✱ ராகு காலம்: 10:12 - 11:43 ✱ எமகண்டம்: 2:43 - 4:14
✱ சூரிய உதயம்: 7:12 ✱ சூரியன் உச்சி: 13:14 ✱ சூரிய அஸ்தமனம்: 19:15

குறிப்பு: இங்கு சிங்கப்பூர் நேரம் தரப்பட்டுள்ளது ஆயினும் வழிபாட்டு நேரத்தை மலேசியா முழுவதும் பயன் படுத்தலாம்.

### தென் கிழக்கு ஆசியா:

பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா, கிழக்கு தீமோர், புருணே, பீஜி தீவுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிலிபைன்ஸ், ஜப்பான், கொரியா, சீனா, தாய்வான் நாடுகளில் **15.1.2011 சனிக்கிழமை** அன்று மகரசங்கராந்தி - பொங்கல் திருநாளாகும்.

### அரபு நாடுகள்:

14.1.2011 வெள்ளி அன்று அரபு நாட்டில் (துபாய்) மாலை சூரிய அஸ்தமனத்திற்கு முன்னர் சூரியன் திருக்கணிதப்படி மாலை 5 மணி அளவில் மகர ராசியில் பிரவேசிப்பதால் **14.1.2011 வெள்ளி** அன்று தான் தைபிறப்பு மற்றும் தைப்பொங்கல் திருநாள்

### இதர நாடுகள்:

ஐரோப்பா, ஆப்ரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா கண்டங்களில் 14.1.2010 வெள்ளி அன்று பொங்கல் திருநாளாகும்

### தானம் - தர்மம்



கிராமத்து விவசாய கூலித்தொழிலாளர்களின் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு புதிய ஆடை வாங்கித்தந்து அவர்களில் இல்லத்தில் மகழ்ச்சி பொங்க வைப்பதுதான் உண்மையான பொங்கல்

**கோபூஜை:** பொங்கல் மூன்று நாட்களிலும் காலையிலும் மாலையிலும் பசுவிற்கு 2கிலோ தவிடு, வெல்லம் கலந்து ஊறவைத்து தானம் செய்யவும்

வெளிநாட்டில் வசிப்பவர்கள் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கும், இலங்கையில் புதிய வாழ்கையை துவங்கும் தமிழர்களுக்கு உதவி செய்தும் பொங்கலை கொண்டாடலாம். உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளின் பராமரிப்பு செலவுகளுக்கு நிதி உதவு செய்யுங்கள்

### உறவுகள் மேம்பட



✱ பொங்கல் விடுமுறையில் **தொலைக்காட்சியின் முன்னே முடங்காமல்** உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து மகிழ்வுடன் பொழுதை களியுங்கள்.
✱ நோயுற்ற, மூத்த உறவினர்களை சந்தித்து ஆறுதல் அளியுங்கள்
✱ கிராமத்திற்கு சென்று வண்ணமயமான பொங்கலை ரசித்து சுவையுங்கள்

**சென்னையில் புதிய சுற்றுலா இடங்கள்:** அண்ணா நூலகம், செம்மொழி பூங்கா, அடையார் பூங்கா

எச்சரிக்கை: தமிழக கடற்கரையில் சீற்றம் அதிகமாக இருக்கும். சென்னை மெரினா கடலில் விளையாட வேண்டாம். உயிர்காப்பு உடை (Life jacket ) இல்லாமல் படகு பயணம் செய்ய வேண்டாம்



பாலு சரவண சர்மா
*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com 31.12.2010